ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2299/69 - 2022 සැප්තැම්බර් මස 30 වැනි සිකුරාදා - 2022.09.30
2299/69 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**தேசிய அரசுப் பேரவையின் 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க காணி சீர்திருத்தச் சட்டத்தின் 27 அ என்னும் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 44 (2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1981 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க காணி சீர்திருத்தச் (விசேட ஏற்பாடு) சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட தேசிய அரசுப் பேரவையின் 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க காணி சீர்திருத்தச் சட்டத்தின் 27 அ (4) ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரான ஹரின் பெர்னான்டோ ஆகிய நான் இக் கட்டளை மூலம்,

அ) 1979 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு உரித்தாக்கப்பட்டுள்ளதும், இக் கட்டளையில் முதலாம் அட்டவணையில் விபரமாக குறித்துரைக்கப்பட்ட ஹெய்யன்துடுவ வத்தை என்பதாக அழைக்கப்படும் மற்றும் குறிப்பிடப்படும் காணியுடன் தொடர்புப்பட்ட 1999 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 11 ஆம் திகதி 1101/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட மேற்குறித்த சட்டத்தின் பிரிவு 27 அ (1) இன் (2) ஆம் உட்பிவிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஹெய்யன்துடுவ வத்தை என்பதாக அழைக்கப்படும் மற்றும் குறிப்பிடப்படும் காணியின் அளவிற்குரிய காணித்துண்டினை இதன் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள காணித்துண்டுக்குரிய கட்டளைகளின் காணித்துண்டுகள், குறித்த தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு கையளிக்கப்படுவதற்கான இரத்துச் செய்வதற்குரிய கட்டளைகள் அல்லது நிபந்தனைகளின் பிரகாரம் செயலிழந்ததன் காரணமாக இரத்துச் செய்வதன் மூலம் அத்தகைய கட்டளைகளை இத்தால் திருத்துகின்றேன்.

ஆ) இது இரத்துச் செய்வதன் மூலம் இக் கட்டளையில் இரண்டாவது அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட காணி அளவினை காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு மீண்டும் கையளிக்கப்படுகின்றது என்பதை இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**ஹரின் பெர்னான்டோ,**
*சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.*

*சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு (காணி),*
*"மிஹிகத்த மெதுர",*
*காணி செயலகம்,*
*1200/6,*
*இரஜமல்வத்தை ஒழுங்கை,*
*பத்தரமுல்லை.*
*2022, செத்தெம்பர் 20.*

**முதலாவது அட்டவணை**

**ஹெய்யன்துடுவவத்தை என அழைக்கப்படும் காணியிலிருந்து உரித்தூக்கப்பட்ட முழு அளவு**

**அட்டவணை**

| அதிவிசேட வர்த்தமானியின் இலக்கமும் திகதியும் | காணியின் பெயர் | மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு உரித்தாப்பட்டுள்ள காணி அளவு ஹெக்டயார் |
|---|---|---|---|---|
| இல. 1101/2<br>1999.10.11 | ஹெய்யன்துடுவ வத்தை | கம்பஹா | பியகம | 10.0236 ஹெக்டயார் 24 ஏக்கர் 3 றூட் 03 பர்ச்சஸ் |
| | ஹெய்யன்துடுவ வத்தை | கம்பஹா | பியகம | 0.6386 ஹெக்டயார் 01 ஏக்கர் 2 றூட் 12.5 பர்ச்சஸ் |

**இரண்டாவது அட்டவணை**

| ஒதுக்கப்பட்டுள்ள விசேட இல | காணியின் பெயர் | மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | கிராம அலுவலர் பிரிவு | ஆணைக்குழுவிற்கு மீண்டும் உரித்தாக்கப்படும் காணி அளவு |
|---|---|---|---|---|---|
| கொ/28 | ஹெய்யன்துடுவ வத்தை | கம்பஹா | பியகம | இல. 271 மாகொல தெற்கு | 10532 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட துண்டு இல. 2A2 இன் ஒரு பகுதியான 11 ஏக்கர் 0 றூட் 10 பர்ச்சஸ் (4.4768 ஹெக்டயார்) விஸ்தீரணமுடைய காணியாகும் |

EOG 09 - 0369